# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2300/24 - 2022 ඔක්තෝබර් මස 05 වැනි බදාදා - 2022.10.05

*2300/24 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆவது உறுப்புரையின் (1)(அ) ஆம் உப உறுப்புரையின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, என்னால், 2022, செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதிய 2297/78 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட, 2022, யூலை மாதம் 22 ஆந் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலானது, 2022, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மேலும் திருத்தப்படுகின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

**ரணில் விக்கிரமசிங்க,**
*சனாதிபதி.*

*சனாதிபதி அலுவலகம்,*
*கொழும்பு 01,*
*2022, ஒற்றோபர் 05.*


1A - G 37695 — 366 (2022/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### அட்டவணை

(1) அவ்வறிவித்தலில் "இல. 01. பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 16 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 17 இலிருந்து 28 வரையான விடயங்களை முறையே 16 இலிருந்து 27 என மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 19 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் II ஆம் நிரலில் இல. 20 இலிருந்து 28 வரையுள்ள விடயங்களை முறையே 19 இலிருந்து 27 வரையென மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(உ) அதன் III ஆம் நிரலிலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (2008 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்
- (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபைச் சட்டம்

(2) அவ்வறிவித்தலில் "இல. 03. தொழில்நுட்ப அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 11 ஆம் விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 12 மற்றும் 13 ஆகிய விடயங்களை முறையே 11 மற்றும் 12 என மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 1 மற்றும் 5 ஆகிய விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் II ஆம் நிரலில் இல. 2 இலிருந்து 4 வரையும் மற்றும் 6 ஆகிய விடயங்களை முறையே 1 இலிருந்து 4 வரையென மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(உ) அதன் III ஆம் நிரலிலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்
- (1994ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் மேம்படுத்துகைச் சட்டம்

(3) அவ்வறிவித்தலில் "இல. 06. முதலீட்டு மேம்பாடு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 7 ஆவது விடயத்தை நீக்குவதன்மூலம்;

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 8 இலிருந்து 12 வரையான விடயங்களை முறையே 7 இலிருந்து 11 வரையென மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 1 ஆவது விடயங்களை நீக்குவதன்மூலம்;

(ஈ) அதன் II ஆம் நிரலில் இல. 2 இலிருந்து 7 வரையுள்ள விடயங்களை முறையே 1 இலிருந்து 6 வரையென மீண்டும் இலக்கமிடுவதன் மூலம்;

(உ) அதன் III ஆம் நிரலிலுள்ள பின்வரும் விடயங்களை நீக்குவதன்மூலம்;

- (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) உள்நாட்டவர் அல்லாதோருக்குப் பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவர் அல்லாதோருக்குப் பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்

(4) அவ்வறிவித்தலில் "இல. 19. கைத்தொழில் அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் II ஆம் நிரலில் இல. 27 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

28. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்.

(ஆ) அதன் III ஆம் நிரலில் "(1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைச் சட்டம்" எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயத்தைச் சேர்ப்பதன்மூலம்;

- (1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் மேம்படுத்துகைச் சட்டம்

(5) அவ்வறிவித்தலில் "இல. 28. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்" எனும் தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:

(அ) அதன் I ஆம் நிரலில் இல. 9 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

10. ஆட்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள்;

11. குடிவரவு மற்றும் குடியகல்வு நடவடிக்கைகள்;

12. ஆபத்தான மருந்துப் பொருட்கள் பாவனையைத் தடுத்தலும் கட்டுப்படுத்தலும்.

(ஆ) அதன் I ஆம் நிரலில் இல. 10 மற்றும் 11 ஆகிய விடயங்களை முறையே 13 மற்றும் 14 என மீண்டும் இலக்கமிடுவதன்மூலம்;

(இ) அதன் II ஆம் நிரலில் இல. 3 ஆவது விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

4. ஆட்பதிவுத் திணைக்களம்,

5. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

6. அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுத் தேசிய சபை

(ஈ) அதன் III ஆம் நிரலில் (1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க) தொண்டர் சமூக சேவைகள் அமைப்பு (பதிவு செய்தல் மற்றும் மேற்பார்வை) சட்டம் எனும் விடயத்துக்குப் பின்னர் பின்வரும் விடயங்களைச் சேர்ப்பதன்மூலம்;

- (1968 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க) ஆட்களைப் பதிவுசெய்தல் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க) குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டம்
- (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க) குடியுரிமைச் சட்டம்
- (2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க) இந்திய வம்சாவளி ஆட்களுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) உள்நாட்டவர் அல்லாதோருக்குப் பிரஜாவுரிமை வழங்கல் சட்டம்
- (1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க) உள்நாட்டவர் அல்லாதோருக்குப் பிரஜாவுரிமை வழங்கும் (விசேட ஏற்பாட்டுச்) சட்டம்
- (2008 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க) போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்ட முரணான வியாபாரத்திற்கு எதிரான சமவாயங்கள் சட்டம்
- (2007 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்க) போதையூட்டும் பொருட்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை அளித்தலும் புனர்வாழ்வளித்தலும்) பற்றிய சட்டம்
- (1984 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க) தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைச் சட்டம்

EOG 10-0025

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.